

# புதுவை மணக்குள விநாயகர் கல்லூரியில் சாகித்திய அகாடமி சார்பில் கருத்தரங்கம்

புதுச்சேரி,ஆக.3-

புதுவை மதகடிப்பட்டு மணக்குள விநாயகர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறையும் சாகித்திய அகாடமியும் இணைந்து நடத்திய 'சிறார்கதைகளும் சிறார்ஆளுமை' என்ற தலைப்பில் அமைந்த ஒரு நாள் கருத்தரங்கம் நிகழ்ச்சி கல்லூரியின் கலையரங்கில் நடைபெற்றது.

மணக்குள விநாயகர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் தனசேகரன் , செயலாளர் நாராயணசாமி கேசவன், பொருளாளர் ராஜராஜன், இணைச்செயலாளர் வேலாயுதம்,

கல்லூரி இயக்குநர் மற்றும் முதல்வர் வெங்கடாசலபதி ஆகியோரின் வாழ்த்துக்களுடன் தொடங்கிய நிகழ்ச்சியில் மணக்குள விநாயகர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் முதல்வர் முத்துலட்சுமி நிகழ்ச்சியை தொடங்கி வைத்து தலைமையுரை வழங்கினார்.

தொடக்க விழா நிகழ்ச்சியின் நோக்கவுரையை புதுவை சாகித்திய அகாடமி உறுப்பினர் பூபதி பெரியசாமி , நன்றியுரையினை புதுவை சாகித்திய அகாடமி ஆலோசனைக்குழு உறுப்பினர் முருகையன் வழங்கினர்.

'சிறார்கதைகளும் சிறார்ஆளுமை' வளர்ச்சியும் என்ற தலைப்பில் அமைந்த இந்த நிகழ்ச்சி 2 அமர்வுகளாக நடைபெற்றது.

2 அமர்வுகளில் 8 கருத்தாளர்கள் கருத்துரை வழங்கினர். முதல் அமர்வில் சிறார்கதைகளின் தோற்றமும் வளர்ச்சியும் என்ற தலைப்பில் முருகேஷ் , அறிவியல் புனைவுக்கதைகள் என்ற தலைப்பில் ஆயிஷா நடராஜன், விலங்குகள் பறவைகளின் கதைகள் என்ற தலைப்பில் நடராசன், நன்னெறி வளர்க்கும் சிறார்கதைகள் என்ற தலைப்பில் மதிப்புறு கல்லை மலரடியான் கருத்துரை வழங்கினர்.

பின்னர் நடைபெற்ற 2-ம் அமர்வில், சிறார்கதைக்கான இலக்கணமும், தலைப்பும் என்ற தலைப்பில் கிருங்கை சேதுபதி, நவீன சிறார் இலக்கியம் என்ற தலைப்பில் மனுஷி சிறார் இலக்கியம் எதிர்கொள்ளும் சவால்கள் என்ற தலைப்பில் பூபதி பெரியசாமி,

சூழலும் காலமும் என்ற தலைப்பில் கலையரசி கருத்துரை வழங்கினர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி அதன் சுற்றுவட்டாரத்தில் உள்ள பள்ளி கல்லூரிகளிலிருந்து 50-க்கும் மேற்பட்ட தமிழாசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

மேலும் மணக்குளவிநாயகர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்கள் 450 பேர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சி மாணவர்களின் தன்னம்பிக்கையும், ஆளுமைத் தன்மையையும் வளர்க்கும் வகையில் அமைந்திருந்தது.

நிகழ்ச்சியின் வரவேற்புரையை தமிழ்த் துறைத் தலைவர் வனிதா, நன்றியுரையினை தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ராஜேந்திரன் ஆகியார். வழங்கினர்.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை தமிழ்த்துறையோடு இணைந்து கல்லூரியின் அனைத்து துறைத்தலைவர்கள் மற்றும் பேராசிரியர்கள் செய்திருந்தனர்.